# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை- 2013

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்தொகை திகதியில் உள்ளவாறு நல்ல ஓட்ட நிலையில் இருந்த சபைக்கு சொந்தமான ரூபா 31,226,680 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 13 முழுமையாக பெறுமானத் தேய்வுசெய்யப்பட்ட வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமொன்றிலிருந்து பல ஆண்டுகளிற்கு முன்பு பெறப்பட்டிருந்த நான்கு வாகனங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களின் உரிமைத்துவம் சபையின் பெயரில் மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 79,988 கூட்டுமொத்தத் தொகையான அட்டுறு செலவினத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

சபையின் கடன்பட்டோர் முகாமைத்துவம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 8,902,798 தொகையான கடன்பட்டோர், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 9,078,050 தொகையான விரிவான பட்டோலையுடன் உடன்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதுள்ள ரூபா 1,780,060 பெறுமதியான 16 மீதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,913,430 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் உள்ளடக்கியிருந்தது.

(இ) ரூபா 356,813 தொகையான வைப்புக்கள் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காசாக்கலின் ஆபத்து சாத்தியத்தை குறிப்பிட்டு சபையானது 18 வெளிவாரி நிறுவனங்களால் செய்யப்பட்ட ரூபா 295,313 பெறுமதியான பெறுவனவுகளை செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஆண்டு இறுதியிலுள்ளவாறான ரூபா 6,284,645 தொகையான வங்கி மீதிகள் தொடர்பில் கணக்காய்வு நோக்கத்திற்காக உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையானது 2011 செப்தெம்பர் மாதத்தில் கணக்காளர் ஒருவரின் சேவையை இடை நிறுத்தியிருந்ததுடன் சேவையை இடை நிறுத்திய திகதியில் நிலுவையாக இருந்த ரூபா 161,554 தொகையான அவருடைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ஐந்தொகை திகதியில் உள்ளவாறு ரூபா 50,835,028 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான நிலையான சொத்துப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2007 இன் 54 ஆம் இலக்க போதைப் பொருளிற்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் மறுசீரமைப்பு) அதிகாரச்சட்டம்- பிரிவு 4(3) | தனியார் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைகளின் வெற்றியளிப்பு தொடர்பில் சிகிச்சை நிலையங்களின் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய வேண்டப்பட்ட காலரீதியான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணங்கள் -109(1)(ஆ) | சபையின் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் விபத்துக்களை சந்தித்திருந்த போதிலும் சபைக்கு சொந்தமான சொத்துக்கள் மீதான நட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 371 (2) (இ) | மீளாய்வாண்டில் 16 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 299,000 தொகையான முற்பணங்களில், ரூபா 136,110 அல்லது |

| | |
|---|---|
| | 45.52 சதவீம் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் காசாக தீர்க்கப்பட்டிருந்தது. 30 முதல் 98 நாட்கள் வரையான கால வீச்சில் தீர்க்கப்படாத மீதிகள் சபையின் ஊழியர்களின் கையில் இருந்தன. |
| 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.3.1 (iii) ஆம் பிரிவு | சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள் குழுப் போக்குவரத்து வசதிக்கு தகுதியுடையவரகளாவர். இருப்பினும், சபையானது சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உதவிப் பணிப்பாளர்களிற்கு உத்தியோக பூர்வ வாகன போக்குவரத்து வசதியினை வழங்கியிருந்ததுடன் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக இரவில் அவர்களுடைய வதிவிடங்களில் வாகனங்கள் தரித்து வைக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 15,013,481 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 6,446,755 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளால் 8,566,726 குறைவைக் காட்டுகின்றது. தேசிய பாதீட்டு திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டவாறு வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்ட ரூபா 1,335,034 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் வருமானத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 1,777,777 தொகையான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட வாகனமொன்றின் விற்பனைத் தொகை என்பன மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையை குறைப்பதற்கு வழிவகுத்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான சபையின் ஆராய்ச்சிப் பிரிவின் செயன் முன்னேற்ற அறிக்கையின்படி, அண்மைக் காலங்களில் போதைப் பொருட்களுடன்

தொடர்புபட்ட விடங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நபர்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

| ஆண்டு | கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | பெண் | ஆண் | மொத்தம் |
| 2010 | 304 | 29,492 | 29,796 |
| 2011 | 359 | 42,144 | 42,503 |
| 2012 | 706 | 47,220 | 47,926 |

மேலும், பொலீஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தால் வெளியிடப்பட்ட தகவல்களின் படி, 2013 ஆகஸ்ட் 30 இல் கைப்பற்றப்பட்ட 261 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளின் பாரிய இருப்பு உள்ளடங்கலாக 2013 இல் 46 சர்தர்ப்பங்களில் 280 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டிருந்தது. ஆதலால், நாட்டின் நகர மற்றும் சிறு நகரப் பகுதிகளில் போதைப்பொருள் பாவனையில் காணப்படுகின்ற துரித வளர்ச்சிக்கு எதிராக கண்டிப்பான கொள்கையின் அவசியத்தினை இது காட்டுகின்றது.

(ஆ) சபையானது நான்கு சேவை நிலையங்கள் ஊடாக போதைப்பொருளுக்கு அடிமையான நபர்களை மறுசீரமைப்பதில் ஈடுபட்டிருந்தது. மீளாய்வாண்டில் சேவை நிலையங்களிலிருந்து உள்ளக சிகிச்சை பெற்றிருந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் முன்னைய இரண்டு அண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான செலவின விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சேவை நிலையங்கள் | உள்ளக சிகிச்சை பெற்றிருந்த நபர்களின் எண்ணிக்கை | | | சிகிச்சையளிக்கப்பட்ட நபர்களின் மாதந்த சராசரி | மொத்தச் செலவினம் (பதவியணியினர் சம்பளம் இல்லாமல்) | ஒரு நபருக்கான மாதாந்த சராசரி செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2013 | 2013<br>ரூபா | 2013<br>ரூபா |
| ஊராபொல | 315 | 255 | 390 | 33 | 4,738,867 | 11,966 |
| தலங்கம | 326 | 340 | 513 | 43 | 4,986,098 | 9,662 |
| கண்டி | 165 | 155 | 82 | 7 | 2,010,909 | 23,939 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காலி | 158 | 134 | 207 | 17 | 4,025,884 | 19,735 |
| மொத்தம் | 964 | 884 | 1,192 | - | 15,761,758 | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 இல் சிகிச்சையளிக்கப்பட்ட 884 நபர்களுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் 1,192 நபர்களிற்காக உள்ளக சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2012 இன் 155 நபர்களுடன் ஒப்பிடும் போது 82 நபர்களுக்கு மாத்திரம் கண்டி நிலையம் சிகிச்சையளித்திருந்தது. ஆதலால், 2013 இல் ஒரு நபருக்கான ரூபா 23,939 உயர்ந்த சராசரிக் கிரயத்தைக் காட்டியது.

(ii) உள்ளக சிகிச்சைக்கு மேலதிகமாக, சபையானது போதைப் பொருளுக்கு அடிமையான நபர்களிற்கு மதியுரை சேவையினை வழகியிருந்தது. இது தொடர்பில், 2012 இன் 1,463 நபர்களுடன் ஒப்பிடுகையில் 2013 இல் 2,021 நபர்களிற்காக மதியுரை சேவை வழங்கப்பட்டிருந்தது.

(iii) சபையால் முகாமை செய்யப்பட்ட நான்கு மறுசீரமைப்பு நிலையங்களிற்கு மேலாக, ஏனைய அரசாங்க மற்றும் அரச சாற்பற்ற நிலையங்களினால் 12 மறுசீரமைப்பு நிலையங்கள் முகாமை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிலையங்களால் சிகிச்சையளிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (டிஎம்எஸ்) 2008 ஒக்தோபர் 13 ஆந் திகதிய பொது/டிஎம்எஸ்/ஈ3/05/04/006/1 ஆம் இலக்க கடிதத்தின்படி, சபையின் நிறைவேற்று பணிப்பாளர் பதவி பணிப்பாளர் நாயகம் என்ற பதவியாக தரமுயர்த்தப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின் (எஸ்ஓஆர்) பிரகாரம், நிறைவேற்று பணிப்பாளர் பதவி நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், சபையின் தற்போதைய பணிப்பாளர் நாயகம் தரமிறக்கப்படாததாகவும் 2008 யூலை 01 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவி திரும்ப

பெறப்பட்டதாகவும் குறிப்பிட்டு 2013 செப்தெம்பர் 20 ஆந்திகதி தலைவி கடிதமொன்றை வழங்கியிருந்தார். நிறைவேற்றுப் பணிப்பாளர் அடிப்படை உரிமை மீறலுக்காக உயர் நீதி மன்றத்தில் சபைக்கு எதிராக வழக்கொன்றை தொடுத்திருந்தார்.

(ஆ) சபையின் அலுவலகங்களுக்கான பாதுகாப்பு சேவை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழுள்ள உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக தலைவியின் தனிப்பட்ட வதிவிடத்திற்கான பாதுகாப்பு சேவை சபைக்கு ரூபா 504,000 மேலதிக கிரயத்தினை ஏற்படுத்துவதன் மூலம் இன்னொரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது.

## 4.3 சபையால் செயற்திட்டங்களை அமுலாக்குவதிலுள்ள நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது ஆர்ஏஎஸ் எச்71 செயற்திட்டம் என அழைக்கப்பட்ட புறம்பான செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திடமிருந்து 2013 இல் ரூபா 685,540 தொகையினை பெற்றிருந்ததுடன் அதில் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பதவியணி உறுப்பினர்களின் வேதனங்களிற்காக ரூபா 237,000 தொகையினை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு செயற்திட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும், ரூபா 3,088,750 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் ரூபா 106,147 தொகை மாத்திரம் ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட கைரேகை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இவற்றைவிட வேறு செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) சபையானது உலக சுகாதார அமைப்பால் நிதியளிக்கப்பட்ட பல்வேறு ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியிருந்ததுடன் அவை தொடர்பில் மீளாய்வாண்டின் போது ரூபா 721,076 ஆன தொகையினை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றல் அறிக்கைகள் நிகழ்ச்சித்திட்டங்களின் செயன் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கு இயலக்கூடியவாறு கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**4.4 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களிலுள்ள 07 பிரதான பதவிகள் மற்றும் இரண்டாம் நிலை மட்டத்திலுள்ள 62 பதவிகளுக்கான ஊழியர் பற்றாக்குறைவுடன் இயங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதி உதவிப் பணிப்பாளர், உள்ளக கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர், நூலகர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக ரூபா 587,372 செலவில் மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரைகூட நிரப்பப்பட்டிக்கவில்லை. அதே பதவிகளிற்காக நபர்களை சேர்ப்பதற்காக இன்னொரு விளம்பரம் 2014 ஏப்ரல் 02 இல் செய்திப்பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

(ஆ) வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 43 நபர்களின் சேவைகள் ஒப்படை அடிப்படையில் தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்தது.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 தூரநோக்கு**

சபையின் தூரநோக்கானது 2020 அளவில் போதைப்பொருள் பாவனையற்ற நாடாக மாறுவதென குறிப்பிடப்பட்டுள்ளமை காலவரையறை கொண்ட குறுகிய நோக்காக உள்ளது.

**5.2 செயல் நடவடிக்கைத்திட்டம்**

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செய்யப்பட்ட நடவடிக்கைகள் மீதான உள்ளபடியான செயலாற்றலை அளவிடுவதற்கான முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை ஆகவே, செயல்நடவடிக்கைத் திட்டம் முறையான விதத்தில் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

சபையால் கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு கிரயம் குறிப்பிடத்தக்களவில் மதிப்பிடப்பட்ட தொகைகளை விஞ்சியிருந்தது. ஆய்வுகூட உபகரணங்கள், பயிற்சிப் பொருட்கள் மற்றும் சீருடைகளின் உள்ளபடியான

கொள்வனவுக் கிரயம் மதிப்பிடப்பட்ட தொகையைக் காட்டிலும் 60 சதவீதத்தால் விஞ்சியிருந்தன. அதேநேரம் பொறி மற்றும் இயந்திரங்களின் கிரயம் மதிப்பிடப்பட்ட தொகைளிலும் 123 சதவீதத்தால் விஞ்சியிருந்தன.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

சபையால் புறம்பான உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்காததுடன் உரிய கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டோ அல்லது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டோ இருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட தொகைகளுக்கும் உள்ளபடியான தொகைகளுக்கும் இடையில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டது. ஆதலால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு.
(ஆ) மறுசீரமைப்பு நிலையங்களின் செயலாற்றல்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு